# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2039 - 2017 සැප්තැම්බර් මස 29 වැනි සිකුරාදා - 2017.09.29

*2039 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1522 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1531 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 1536 |


**கவனிக்க.-** *ஸ்ரீ சாக்கிய சிங்காராம விகாரஸ்த கார்ய சாதக சங்விதானய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2017, செத்தெம்பர் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறை நிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2017, ஒற்றோபர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## குண்டசாலை பிரதேச சபை

*மத்திய மாகாண அரச சேவையியில் உள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புதல்*

*குண்டாலை பிரதேச சபையில் நிலவும் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கென குண்டசாலை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிட எண்ணிக்கை | கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் | சம்பள அளவுத் திட்டம் | ஆட்சேர்ப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | வேலை/ வெளிக்களப் பரிசோதகர் | 01 | ஒரே அமர்வில் க. பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம் மற்றும் இரண்டு திறமைச் சித்திகளுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்<br><br>க.பொ.த. (உ.த.) பரீட்சையில் குறைந்தது 1 பாடத்தில் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்<br><br>துறை சார்ந்த தொழில்நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து தேசிய தொழில்நுட்பம் (குடிசார்) பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல் | ரூபா 27,140-10x 300-11x350-10x 495-10x660- ரூபா 45,540 MN1-2016 | எழுத்துப் பரீட்சை<br><br>தொழில்சார் தேர்வு<br><br>பொதுவான நேர்முகத் தேர்வு |
| 2 | சுகாதாரப் பரிசோதகர் | 01 | ஒரே அமர்வில் க.பொ.த. (சாதாரண தர) பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம், கணிதம் மற்றும் இரண்டு திறமைச் சித்திகளுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்<br><br>க.பொ.த. (உ.த.) பரீட்சையில் குறைந்தது 1 பாடத்தில் (பொதுச் சாதாரண பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் | ரூபா 27,140-10x 300-11x350-10x 495-10x660- ரூபா 45,540 MN1-2016 | எழுத்துப் பரீசை<br><br>பொதுவான நேர்முகத் தேர்வு |
| 3 | வாகன ஓட்டுநர் | 01 | இரு அமர்வுகளுக்கு மேற்படாது க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் 2 திறமைச் சித்திகளுடன் குறைந்தது 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்<br><br>மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கனரக வாகன ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் மற்றும் குறைந்தது 3 வருட கால அனுபவம் | ரூபா 25,790-10x 270-10x300-10x 330-12x350- ரூபா 38,990 PL3-2016 | எழுத்துப் பரீட்சை<br><br>தொழில்சார் தேர்வு<br><br>பொதுவான நேர்முகத் தேர்வு |
| 4 | அலுவலகக் கரும உதவியாளர் | 01 | இரு அமர்வுகளுக்கு மேற்படாது க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் 2 திறமைச் சித்திகளுடன் குறைந்தது ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் | ரூபா 24,250-10x 250-10x270-10x 300-12x330- ரூபா 36,410 PL1-2016 | கட்டமைப்பான நேர்முகத் தேர்வு |

*1.* **ஆட்சேர்ப்புக்கான பொதுவான நிபந்தனைகள் :**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கனவே நிரந்தர அரச சேவையில உள்ளோருக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.
(iii) குண்டசாலை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் தொடராகக் குறைந்தது 03 வருடகால நிரந்தர வதிவைக் கொணடிருத்தல் வேண்டும். (வாக்காளர் இடாப்பு அல்லது பிரதேச செயலாளர் வழங்கும் சான்றிதழ் மூலம் அதனை உறுதிப்படுத்ததுதல் வேண்டும்)
(iv) சிறந்த நன்னடத்தை உடையவராகவும், நல்ல உடல்நிலையைக கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
(v) குற்றவியல் சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் கருதப்பட்டவராக இருத்தல் கூடாது.
(vi) மாகாண அரச அல்லது அரச சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படாதவராக இருத்தல் வேண்டும்.
(vii) பொது நிர்வாக 44/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் கீழ் ஓய்வு பெற்றவராக இருத்தல் கூடாது.
(viii) குண்டசாலை பிரதேச சவையில் தற்போது தற்காலிக/சமயோசித/பதிலீட்டு/ஒப்பந்த/தன்னார்வ/நிரந்தர அடிப்படையில் பணியாற்றுவோருக்கு முன் உரிமை வழங்கப்படும்.
(ix) விண்ணப்பம் கேரப்பட்ட பின்னர் அல்லது கோரப்பட்ட தருணத்தில் மத்திய மாகாணத்தில் இந்தப் பதவிகளுக்கான புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை விதிகளில் திருத்தம் செய்தல், விதிகளைப் பதிலீடு செய்தல், மற்றும் இந்த ஆட்சேர்ப்பு அறிவித்தலை தாமதிக்கச் செய்யும், மாற்றியமைக்கும், இரத்துச் செய்யும் அதிகாரம் குண்டசாலை பிரதேச சபையின் செயலாளருக்கு உண்டு.

*2.* **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையவை. மூன்று வருடத் தகுதி காண் காலத்துக்கு உட்படுபவை. நிரந்தர ஊழியர்கள் 1 வருடம் பதில் சேவைக் காலத்துக்கு உட்படுவர்.
(ii) விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
(iii) 01/2014 ஆம் இலக்கப் பொது நிர்வாகச் சுற்றறிக்கைக்கு அமையப் பதவிக்கான அரசகரும மொழி பற்றிய புலமையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
(iv) இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கும் விதிகளுக்கும் மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, அரசாங்க நிதிப் பிரமாணங்கள், அரச திணைக்களங்கள், மத்திய மாகாண சபை, அல்லது குண்டசாலை பிரதேச சபை காலத்துக்குக் காலம் விதிக்கும் பிரமாணங்களுக்கும் கட்டளைகளுக்கும் நியமங்களுக்கும் அமைய செயற்படுவதற்கு நியமனம் உட்படும்.

3. தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவதுடன், விண்ணப்பப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்களின் நிழற்படப் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) தேசிய அடையாள அட்டையின் பிரதி ;
(iv) வதிவிடம் பற்றிய பிரதேச செயலாளரது சான்றிதழ் ;
(v) அண்மையில் பெறப்பட்ட 2 குணச் சான்றிதழ்கள் (ஒரு சான்றிதழ் கிராம அலுவலர் வழங்கியதாக இருத்தல் வேண்டும்)
(vi) அனுபவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ;
(vii) ஏனைய தகைமைகளைக் காட்டும் சான்றிதழ்கள்.

4. தொழில்சார் தகவல்களுடனான முழுமையான விபரங்களைக் கொண்டுள்ளவாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2017.10.27 ஆந்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது நேரில் கையளித்தல் வேண்டும்.

5. விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

6. தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையின் பதவி வகிக்கும் விண்ணப்பதாரியாயின் தமது விண்ணப்பங்களை நிறுவன தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

7. குறித்த திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

எஸ். ஆர். அதாவுத,
செயலாளர்.
குண்டசாலை.

குண்டசாலை பிரதேச சபை அலுவலகம்,
மெனிக்ஹின்ன,
2017, செத்தெம்பர் 06.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**குண்டசாலை பிரதேச சபையில் ........................................................................ பதவிக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ..........................................................................
முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் : ..........................................................................

2. நிரந்தர விலாசம் : ..........................................................................

3. பிறந்த திகதி :
ஆண்டு .......................... மாதம் : .......................... திகதி : ..........................

4. தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | |

5. பால் (ஆண்/பெண்) : ..........................................................................

6. தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

7. விவாகமானவர்/தனித்தவர் : ....................................................

8. கல்வித் தகைமைகள் :

(i) விண்ணப்பதாரி இறுதியாகச் சித்தியடைந்த வகுப்பு : சிங்களம் : .....................................................
தமிழ் : .....................................................

(ii) க.பொ.த. (சா.த.) பரீட்சை :
வருடம் : .................................................
சுட்டெண் : .................................................
பெறுபேறு :

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9 | |
| 5. | | 10. | |

8.3 க.பொ.த. (உ.த.) பரீட்சை :

வருடம் : ..................................................

சுட்டெண் : ..................................................

பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

09. தொழிற் தகைமைகள் மற்றும் அனுபவம் : ..........................................................................................................

10. ஏனைய தகைமைகள் : ..........................................................................................................

11. ஏதேனும் குற்றம் ஒன்றுக்கு நீதிமன்றத்தால் குற்றவாளியாக்கப்படுள்ளீரா ? : ......................................................

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நான் அறிந்தவகையில் உண்மையானவை என உறுதிப்படுத்துகிறேன். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான மேற்குறித்த விபரங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் நியமனத்துக்கு முன்னரெனின் நான் தகுதியற்றவனாக்கப்படுவேன் என்பதையும், நியமனத்தின் பின்னரெனின் பதவிநீக்கம் செய்வதற்கு உட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

............................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ............................................

திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி .......................................................................................................... தற்போது நிறுவனத்தில் .................................................. ஆக சேவையாற்றுகிறார். இவரது விண்ணப்பத்தைப் பரிந்துரைத்து முன்வைக்கின்றேன். அவரது வேலையும் நடத்தையும் திருப்தியானவை எனவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதுவும் இல்லை எனவும், அவை பற்றி நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் இல்லை எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் இந்தப் பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................

திணைக்களத் தலைவரது கையொப்பமும்
பதவி முத்திரையும்

திகதி :- ............................................................

9 - 649

## நவகத்தேகம பிரதேச சபை

நவகத்தேகம பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள முதன்மை தொழில்நுட்பமற்ற சேவை III தரத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு தகைமையுடையவர்களை தேர்ந்தெடுப்பதற்காக உரிய தகைமைகளை உடைய நவகத்தேகம பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் நிரந்தரமாக வசிப்பவர்களிடத்தில் இருந்து விண்ணப்பப் படிவம் கோரப்படுகின்றது.

| பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| வேலை/ கள தொழிலாளர் | 01 | PL-1-2016(A) ரூபா 24250-10X250-10X270-10X300-12X330- ரூபா 36410 | கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விருப்பு பாடம் தவிர்த்து) (தற்போது அமைய, தற்காலிக, ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ள சேவையாளர்களுக்கு மாத்திரம் தனிப்பட்ட வகையில் தற்போதுள்ள ஆட்சேர்ப்பு நடை முறையின்படி கல்வித் தகைமை உரித்தாகும். |

**2. ஏனைய தகைமைகள் :**

1. விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் கடைசித் தினத்திற்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரி பரம்பரையாகவோ பதிவு செய்தல் மூலமே இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பதாரி நவகத்தேகம பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத காலம் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல் வேண்டும். (கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்படும் சான்றிதழ் பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)
4. விண்ணப்பதாரி நல்லொழுக்கமும் சரீர சுகமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெறாதவராக இருத்தல் வேண்டும்.
6. மாகாண அரச சேவையில் நிரந்தர/அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையின் கீழ் தற்போது சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுக்கும் மேற்குறிப்பிட்ட பதவிக்காக விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவம் பொறுப்பேற்கப்படும் கடைசித் தினத்திற்கு குறைந்த பட்சம் 5 ஆண்டு காலத்தினுள் எவ்வித குற்றத்திற்கும் (எச்சரிக்கை தவிர) தண்டனை பெறாமலும் இக் காலத்தினுள் எல்லா சம்பள உயர்வுகளும் உரிய தினத்தில் பெற்றிருத்தலும் திருப்திகரமான சேவை காலத்தை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
7. விண்ணப்பதாரிகள் பதவியின் எதிரில் காட்டியுள்ள தகைமையினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**3. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதியம் உடையது.

(ii) உங்களுக்கு உரித்துடைய ஓய்வூதிய திட்டம் பற்றி அரசினால் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் கொள்கை தீர்மானங்களுக்கு நீங்கள் உட்படுதல் வேண்டும்.

(iii) நியமனம் 3 ஆண்டு தகுதி காண் காலத்தைக் கொண்டது.

(iv) இவ் ஆட்சேர்ப்பு இலங்கை அரசின் தாபன விதிக் கோவைச் சட்டதிட்டங்களுக்கும் நிதிச் சட்டதிட்டங்களுக்கும் திணைக்கள கட்டளைகளுக்கும் அரசு அல்லது மாகாண சபையினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு எல்லா சேவையாளர்களும் கட்டுப்படுதல் வேண்டும்.

**4. ஆட்சேர்ப்பு முறை :**

1. தேவைக்கேற்ப எழுத்து மூலமான/ கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றுப்படி தகைமையுடையவர்கள் தேர்ந் தெடுக்கப்படுவர்.

2. விண்ணப்பப் படிவத்துடன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டியதுடன், மூலப் பிரதியினை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும் :
   (அ) பிறப்புச் சான்றிதழ் ;
   (ஆ) கல்விச் சான்றிதழ்.
3. தமது வதிவிடத்தினை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் சான்றிதழ்
4. அண்மையில் பெற்றுக் கொண்ட நற் சான்றிதழ் 02 (ஒன்று கிராம அலுவலரினால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும்.)
5. தொழில் அல்லது அனுபவம் பற்றிய சான்றிதழ் இருந்தால் அச்சான்றிதழ்கள்
6. ஆரம்ப தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர்.
7. விண்ணப்பதாரிகள் இவ் அறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய ஒழுங்கமைத்து விண்ணப்பப் படிவங்கள் 2017.10.09 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கும் வண்ணம் "செயலாளர், பிரதேச சபை, நவகத்தேகம" என்ற முகரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப் பத்திரத்தினை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரினை தெளிவாக குறிப்பிடல் வேண்டும். பிழையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், பூர்த்தியற்ற விண்ணப்பப் படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

விண்ணப்பம் கோரப்பட்டதன் பின்பு அல்லது கோரப்படும் சந்தர்ப்பத்தில் இந்த ஆட்சேர்ப்பினை காலதாமதப் படுத்துதல் அல்லது திருத்தம் செய்யும் பூரண அதிகாரம் நவகத்தேகம பிரதேச சபையின் செயலாளருக்குரியதாகும்.

எச். எம். எஸ். ஹேரத்,
செயலாளர்,
நவகத்தேகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
நவகத்தேகம,
2017, செத்தெம்பர் 11.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நவகத்தேகம பிரதேச சபை**

முதன்மை தொழில்நுட்பமற்ற சேவைத் தரத்தில் வேலை/கள தொழிலாளர் III தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பம்.

1. (i) விண்ணப்பதாரியின் பெயர் முதலெழுத்துக்களுடன் : ....................
   (ii) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் : ....................
2. நிரந்தர முகவரி : ....................
3. பிறந்த திகதி : ஆண்டு : ................... மாதம் : ................... திகதி : ...................
4. விண்ணப்பப் படிவம் பொறுப்பேற்கப்படும் கடைசித் திகதிக்கு வயது :
   வருடம் : ................... மாதம் : ................... நாள் : ...................
5. தேசிய அடையாள அட்டை இல. : ....................
6. பால் : ஆண்/பெண் ....................
7. திருமணமானவர்/திருமணமாகாதவர் என்பது பற்றி : ...................
8. தேசிய இனம் : ....................
9. நீங்கள் இலங்கை பிரசையா? அப்படியாயின் பரம்பரையாகவா? பதிவு முறையிலா என்பது பற்றி : ....................
10. கல்வித் தகைமை (சான்றிதழ்களின் நிழற் படப் பிரதியினை இணைக்கவும்) :

11. நீங்கள் தற்போது அரச சேவையில் உள்ளீர்களா? ..................................................................................................
அப்படியாயின் பதவி ....................................................... சேவை செய்யும் இடம் ..........................................................
அப்பதவியின் தன்மை நிரந்தரம்/ அமைய/ தற்காலிக என்பது பற்றி .................................................................
12. அனுபவமும் தொழில் தகைமையும் : ..........................................................................................

இவ்விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், பிழையற்றதும் என்று உறுதிப் படுத்துகின்றேன். இங்கு உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களில் ஏதாவதொன்று பொய்யானது அல்லது பிழையானது என்று இப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு தெரியவந்தால் நான் தகைமையற்றவன் என்றும், நியமனம் கிடைத்ததன் பின்பு தெரியவந்து உறுதிப்படுத்தப்பட்டால் எவ்வித நட்டஈடும் செலுத்தப்பட்டாமல் பதவியில் இருந்து நீக்கப்படுவதற்கும் உட்படுகின்றேன்.

.......................................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி : .....................................................................

13. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

(தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் நிரந்தர/அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்ற விண்ணப்பதாரிகளுக்காக)

இவ் விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ........................................................................................
ஆந் திகதி தொடக்கம் இவ்வலுவலகத்தில் நிரந்தர/அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்றார் என்றும், அவரின் வேலை, வரவு மற்றும் நடத்தை திருப்திகரமானது என்றும் மேற்குறிப்பிடப்பட்ட 1 தொடக்கம் 8 வரையில் குறிப்பிடப் பட்டுள்ள எல்லாத் தகவல்களும் இவ் அலுவலகத்தில் உள்ள அறிக்கைப்படி தனிப்பட்ட முறையில் பரிசீலித்தேன் என்றும், அவை சரியானது என்றும், 2017.........மாதம் .........ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

.......................................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் : .......................................................................................................
பதவி : ..............................................................................................................
முகவரி : ..................................................................................................................
திகதி : ..................................................................................................................

9 - 718

---

**ஹொரணை நகர சபை**

மேல் மாகாண அரச சேவையில் உள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புதல்

ஹொரணை நகர சபையில் தற்சமயம் வெற்றிடமாகவுள்ள கீழ்க் காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு உரிய தகைமைகளுடைய மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடமுடையவர்களிடம் இருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (ஹொரணை நகர சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வதிவிடமுடைய விண்ணப்பதாரிகளுக்கும் ஏற்கனவே தற்காலிக, அமைய மற்றும் பதிலீடு அடிப்படையில் சேவையாற்றும் விண்ணப்பதார்கள் தொடர்பாக முன் உரிமை செலுத்தப்படும்).

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டம் அ.சு.நி. 03/2016 இன் பிரகாரம் | கல்வித் தகைமைகளும் ஏனைய தகைமைகளும் |
|---|---|---|---|---|
| 1 | அலுவலக வேலை உதவியாளர் | 01 | PL 1- 2016 ரூபா 24250-10x250-10x270-10x300-12x330-36410 ரூபா (3 வருடங்கள் செல்வதற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற வேண்டும்) | க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு (2) திறமைச் சித்திகள் அடங்கலாக ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரே அமர்வில் குறைந்த பட்சம் 05 பாடங்கள் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்) |
| 2 | காவலாளி | 01 | PL 1- 2016 A ரூபா. 24250-10x250-10x270-10x300-12x 330-36410/= (03 வருடங்கள் செல்வதற்கு முன்னர் வினைதிறமைக்காண் தடை தாண்டல் பரீட்சை) | க. பொ. த. (சா.த) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு குறைந்த பட்சம் இரண்டு (2) திறமைச் சித்திகள் அடங்களாக ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (ஒரு அமர்வில் குறைந்த பட்சம் 5 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்) |
| 3 | வேலை/தள தொழிலாளர் | 01 | PL 1- 2016 ரூபா 24250-10x250-10x270-10x300-12x 330-36410 ரூபா (3 வருடங்கள் செல்வதற்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற வேண்டும்) | குறைந்த பட்சம் 8 ஆம் தரம்/ 9 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |
| 4 | சுகாதார தொழிலாளர் | 02 | PL 1- 2016 A ரூபா 24250-10x250-10x270-10x300-12x 330-36410 ரூபா (3 வருடங்கள் செல்வதற்கு முன்னர் வினைதிறமைக்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தி பெற வேண்டும்) | குறைந்த பட்சம் 8 ஆம் தரம்/ 9 ஆம் ஆண்டு சித்தி பெற்றிருத்தல் வேண்டும். |

**2. ஆட்சேர்ப்பு முறை :**

அ. வே. உ. காவலாளி, வேலை/கள தொழிலாளர், சுகாதார தொழிலாளர் பதவிகளுக்காக கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரிட்சையொன்றின் மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரிட்சை : 01 மணித்தியாலம்

**3. இணைத்துக்கொள்வதற்கான நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி மேல் மாகாணத்தினுள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த 03 வருடங்கள் நிரந்தர வசிப்பிடமுடையவராய் இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது வருடங்கள் 18 க்கு குறையாமலும் 45 க்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பதாரி சிறந்த ஆரோக்கியமுடையவராகவும் நன்னடத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(v) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்ட அல்லது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் இருந்து விலக்கப்பட்டவராக இருத்தலாகாது.

**4. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் பெறக்கூடியதுமாகும்.

(ii) இந்த நியமனம் 03 வருட கால தகுதிகாண் காலத்துக்கு உட்பட்டதாகும்.

(iii) அரச கரும மொழிக் கொள்ளைக்கு ஏற்புடையவாறு இருத்தல் வேண்டும்.

(iv) விதவைகள் அனாதைகள்/தபுதாரர் ஓய்வுதிய நிதியத்திறகு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.

5. இந்த ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குவிதிமுறைகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணக்குறிப்பு, திணைக்களக் கட்டளைகளுக்கு, மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு, ஹொரணை நகர சபை மூலம் காலத்துக்கு காலம் விடுக்கிப்படுகின்ற கட்டளைகளுக்கு ஏற்புடையவாறு செயற்படுவதற்கும் நியமனதாரர் உடன்பட வேண்டும்.

**6. விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முறை :**

விண்ணப்பதாரிகள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பபடிவங்களை பூர்த்திசெய்து "செயலாளர், ஹொரணை நகர சபை, ஹொரணை " எனும் விலாசத்திற்கு 2017.10.10 ஆந் திகதிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
விண்ணப்பிக்கும் பதவியை விண்ணப்பப்படிவத்திலும் விண்ணப்பம் அடங்கும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையிலும் குறிப்பிடுதல் வேண்டும். பூர்த்தியற்ற மற்றும் தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்துடன கீழ்க் காணும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் :

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் கையொப்பம் அடங்களான கிராம அலுவலரின் சான்றிதழ் ;
(iv) அண்மையில் பெறப்பட்ட நன்குணம் பற்றிய சான்றிதழ்கள் இரண்டு ;
(v) ஏனைய தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள் ;
(vi) சேவை அனுபவங்கள் பற்றிய சான்றிதழ்.

இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னார் அல்லது கோரப்படும் வேளையில் இந்த ஆட்சேர்த்தலை தாமதப்படுத்தல் அல்லது மாற்றியமைத்தல் மற்றம் இவ்வறித்தலை இரத்து செய்தல் போன்ற சகல அதிகாரங்களும் ஹொரணை நகர சபையின் செயலாளருக்கு உண்டு.

அடிப்படைத் தகைமைகள் உடைய விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்.

மானெல் சியம்பலாகொட,
செயலாளர்,
ஹொரணை நகர சபை.

நகர சபை அலுவலகம்,
ஹொரணை.
2017, செத்தெம்பர் 15.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரச சேவையின் ஹொரணை நகர சபையில் ......................................... பதவிக்கான விண்ணப்பம்**

1. விண்ணப்பதாரியின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) : ..........................................................................................
முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர்கள் : ..........................................................................................................

2. நிரந்தர விலாசம் : ........................................................................................................................................

3. தொலைபேசி இலக்கம் :

4. நிரந்தர வதிவிட மாவட்டம் : ..........................................................................................................................................

5. தேசிய ஆள்அடையாள அட்டை இலக்கம் :

6. பால் (ஆண்/பெண்) : ..........................................................................................................

7. பிறந்த திகதி :
(i) ஆண்டு .......................... மாதம் : .......................... திகதி : ..........................

(ii) 2017.10.10 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் .......................... மாதங்கள் : .......................... நாட்கள் : ..........................

8. இலங்கை பிரசையா? ஆம் என்றால் பரம்பரையிலா? பதிவினாலா? : ....................................................

9. கல்வித் தகைமைகள் பற்றிய விபரம் :

10. தொழிற்துறை தகைமைகள் (சான்றிதழ் மூலம் நிரூபிக்க வேண்டும்) : ....................................................

11. சேவை அனுபவம் : ....................................................

12. ஏனைய தகைமைகள் : ....................................................

13. நீங்கள் எப்போதாவது நீதிமன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா ? ..............................................................

இந்த விண்ணபப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்ககள் அனைத்தும் நான் அறிந்த வகையில் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதி மொழிகிறேன். இந்த ஆட்சேர்ப்பு பற்றிய நிபந்தனைகளின் பிரகாரம் என்னால் பிழையான தகவலொன்று வழங்கப்பட்டுள்ளதாக நிரூபிக்கப்பட்டால் நான் சேவையில் இணைத்துக்கொள்ள முன்னர் தகுதியற்றவராவேன் எனவும் நியமனம் பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் எந்த வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் அறிவேன்.

..........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ............................................

9 - 891

---

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## குண்டசாலை பிரதேச சபை

ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்

**1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள்**
(ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டம்

(261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவும், 1987 ஆம் ஆண்டின்

*15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) உப பிரிவுக்கு அமையவும் பின்வரும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப் படுகின்றது.*

*செயலாளர்,*
*குண்டசாலை பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*குண்டசாலை,*
*2017 செத்தெம்பர் 06.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் ஆவது பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (261 ஆம் அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் (2) ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் அமைச்சரால் ஆக்கப்பட்டதும், மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டதும், 2016.02.23 ஆந் திகதியையும் 1955/7 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பகுதி IV (அ) வர்த்தமானியில் பிரிசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டதும், 2017.05.05 ஆந் திகதியையும் 2017/42 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகுதி IV (அ) வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகளை.*

| தொடர் இல. | துணை விதிகள் | வர்த்தமானி இலக்கம் | வெளியிடப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 1 | பிரதேச சாையின் எல்லைக்குள் கட்டடங்களை நிருமாணிப்பதற்கான திட்டங்களைப் பரிசீலித்தல் மற்றும் கட்டடணங்கள் அறவிடுவது தொடர்பான துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 2 | சேவைக் கட்டணங்கள் அறவிடுவது தொடர்பான துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 3 | முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 4 | பொது நூலகங்கள் பற்றிய துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 5 | நடமாடும் விற்பனை பற்றிய துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 6 | தகனசாலைகள் பற்றிய துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 7 | வரி அறவிடுவது தொடர்பான தவணை அறிக்கைகளையும் தகவல்கயையும் பெறுவது பற்றிய துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 8 | அருவருப்பான, அபாயகரமான மற்றும் அருவருப்பான அபாயகரமான வர்த்தகங்கள் பற்றிய துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 9 | மீன் விற்பனை தொடர்பான துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 10 | பிரதேச சபை சந்தைகள் பற்றிய துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 11 | அலங்காரங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பற்றிய துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 12 | பொது மலகூடங்கள் பயன்படுத்துவதை முறைப்படுதுவது தொடர்பான துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 13 | விளம்பர அறிவித்தல்கள் பற்றிய துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 14 | விலங்குப் பண்ணைகளை நிர்வகித்தல் மற்றும் முறைப்படுத்துதல் பற்றிய துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 15 | வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது பற்றிய துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 16 | இறைச்சி விற்பனை தொடர்பான துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 17 | தனியார் கற்றல் நிலையங்கள் தொடர்பான துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |
| 18 | மாடு அறுவை செய்யுமிடங்கள் பற்றிய துணை விதிகள் | 1955/7 | 2016.02.23 |

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து செயற்படுத்தவும், அதற்கு முதல் நாள் நள்ளிரவு 12 மணி வரை குண்டசாலை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் செயற்பட்டு வந்த மேலே குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகளைச் செயலிழக்கச் செய்யவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2017.08.31 ஆந் திகதி கொண்ட சபையின் 397/2017ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

*9-650/1*

---

**குண்டசாலை பிரதேச சபை**

ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்

***1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள்***
(ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டம்

*(261 ஆவது அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) உப பிரிவுக்கு அமையவும் பின்வரும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

எஸ். ஏ. கே. என். இந்திரஜித்,
செயலாளர்,
குண்டசாலை பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,*
*குண்டசாலை,*
*2017, செத்தெம்பர் 06.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, (261 ஆவது அத்தியாயமாகிய) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் (2) ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2013.06.28 ஆந் திகதியையும் 1816/42 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகுதி IV (அ) அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டதும் மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டதும், 2015.06.08 ஆந் திகதியையும், 1918/7 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகுதி IV (அ) வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டதுமான திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகளை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து குண்டசாலை பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் செயற்படுத்துவதெனவும், குறித்த தினத்துக்கு முதல் நாள் நள்ளிரவு 12 மணி வரை செயலில் இருந்து வந்த கழிவுப் பொருட்களை அகற்றுவது தொடர்பில் செயற்பட்டு வந்த துணை விதிகளைச் செயலற்றதாக ஆக்குவதெனவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங் களுக்கமைய 2017.08.31 ஆந் திகதி கொண்ட சபையின் 397/2017 ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

*9 - 650/2*

---

**ஊன் வினைஞர் கட்டளைச் சட்டம்**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*பிபிலை பிரதேச சபையினால் நடாத்தப்படும் கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் 2018 ஆம் ஆண்டிற்கான கால்நடை இறைச்சி விற்பனை அனுமதி பத்திரம் வழங்குவதற்கு உத்தேசித்துள்ளேன். பிபிலை பிரதேச சபைக்குட்பட்ட*

பகுதிகளில் வசிக்கும் எவராவது இதற்கு எதிர்ப்பு தெரிவிப்பார்களேயானால் 2017.09.30 ஆந் திகதிக்கு முன்னர் உரிய உத்தியோகத்தருக்கு இரண்டு பிரதிகளோடு கூடிய எழுத்து மூலமான எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும்.

டி. எம். பிரேமசேகர,
செயலாளர்,
பிபிலை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பிபிலை,
2017, ஓகத்து 29.

**அட்டவணை**

| தொடர் இல. | வியாபாரத்தின் பெயர் | வியாபார இடம் |
|---|---|---|
| 01. | பிபிலை மாட்டிறைச்சிக் கடை | பிபிலை, கிவுலபிட்டிலந்த வீதி மீன் மற்றும் இறைச்சி கடை தொடர் |
| 02. | கனுல்வெல மாட்டிறைச்சிக் கடை | பிரதான வீதி, கனுல்வெல, பிபிலை. |

9 - 651

---

## கரைதுறைப்பற்று பிரதேச சபை

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டம்

1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் நியமத் துணைவிதிகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி கரைதுறைப்பற்று பிரதேச சபையால் கீழ்க்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சீ. சபேசன்
செயலாளர்,
கரைதுறைப்பற்று பிரதேச சபை

கரைதுறைப்பற்று பிரதேச சபை அலுவலகம்,
முல்லைத்தீவு,
2017, ஓகத்து 29.

**2017.06.30 ஆந் திகதிய 110 ஆம் இலக்க தீர்மானம்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது விதியின் 1 ஆவது உபபிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (நியமத் துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உபபிரிவின் கீழ் வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் படி வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2016.02.02 ஆந் திகதிய 1952/16 இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வடக்கு மாகாண சபையால் 2017.02.21 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு, 2017.03.24 ஆந் திகதிய 2011/25 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான, அத்தியாயம் 1 - 6 வரையான வடக்கு மாகாண பிரதேச சபைகளுக்கான நியமத்துணை விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வது என்றும் கரைதுறைப்பற்று பிரதேச சபை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நியமத்துணைவிதிகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் கரைதுறைப்பற்று பிரதேச சபை தீர்மானிக்கின்றது.

9 - 872

## மஹரகம நகரசபை

### நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்

நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செலாளர் பிரிவில், மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் பொருட்டான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரிசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் எழுத்தில் கொடுக்கப்படல் வேண்டும்.

03. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களின் தகவல் பொருட்டு அறிவிக்கப்படுகின்றது.

செயலாளர் ,
சபையின் கருமங்களுக்கான பொறுப்பாளர்,(ப.க.)
மஹரகம நகர சபை.

நகர சபை அலுவலகம்,
மஹரகம.
2017,செத்தெம்பர் 13.

#### அட்டவணை

| தொடர் இலக்கம் | திட்ட இலக்கம் மற்றும் திகதி | வீதியின் பெயர் | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | அட்டவணையின் படி எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | திட்ட இல. 887<br><br>1990.05.02 ஆந் திகதி ஐ. எம். சீ. பர்னாந்து நில அளவையாளர் அவர்களினால் வரையப்பட்டது | ருக்மல் பாடசாலை மாவத்தையில் வெலிஹேன்பிட்டலந்த குறுக்கு வீதி (வ.ப. 81/3, 108/3/ஏ, 75/15, 75/11, 85/12, 81/16, 81/14, 81/5, 81, 80/10, 81/18, 83/18) | 293 மீ. | 6.0 மீ. | வடக்கில் : இவ்வரைபடத்தின் துண்டு இலக்கங்கள் 11, 8, 7, 4, 3, 1 ஆர். தொன் ஜுவானிஸ் அவர்களுக்குச் சொந்தமான காணி<br><br>தெற்கில் : இவ்வரைபடத்தின் துண்டு இலக்கங்கள் 12, 16, 17, 20, 23, 24, 28, 27<br><br>கிழக்கில் : ருக்மல் மயான வீதி<br><br>மேற்கில் : இவ்வரைபடத்தின் துண்டு இலக்கங்கள் 25, 26 |

| தொடர் இலக்கம் | திட்ட இலக்கம் மற்றும் திகதி | வீதியின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | வீதி தொடக்கம் | வீதி முடிவு |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | தி. இல. 119 ஏ | பன்னிபிட்டிய ப்ரகத்தி மாவத்தை 4 ஆம் குறுக்கு வீதி | 531/பன்னி பிட்டிய வடக்கு | 21.34 மீ<br>24.08 மீ<br>8.23 மீ | 3.0 மீ<br>3.65 மீ<br>3.65 மீ | வ. பண இல. 70/19 | வ.பண இல.70/20 |

| தொடர் இலக்கம் | திட்ட இலக்கம் மற்றும் திகதி | வீதியின் பெயர் | வீதியின் நீளம் | வீதியின் அகலம் | அட்டவணையின் படி எல்லைகள் |
|---|---|---|---|---|---|
| 01 | திட்ட இல. 1038<br>திகதி: 2004.09.07 | தெபாணம சுரெக்கி செவன வீதி யின் எஞ்சிய பகுதி | 173.0அடி<br>99.0அடி | 15 அடி<br>10.0அடி | வடக்கில் : தனியார் காணி<br>தெற்கில் : வீர மாவத்தைக்கு செல்லும் வீதி<br>மேற்கில் : தனியார் காணிகள்<br>கிழக்கில் : தனியார் காணிகள் |

9 - 874

---

## நானாவித அறிவித்தல்கள்

### வெங்கலச்செட்டிகுளம் பிரதேச சபை

1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 147, 148, 149,150, 152(1) 109 (ஈ), 127 ஆம் பிரிவுகளின் பிரகாரமும் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபையின் 164 ஆம் இலக்க 13.09.2017 ஆந் திகதிய தீர்மானத்தின் பிரகாரமும் 2017 ஆம் ஆண்டு தை மாதம் தொடக்கம் கீழேகுறிப்பிட்ட அட்டவணைகளில் தரப்பட்ட வியாபாரங்களிலிருந்து உரிமக்கட்டணமும் அல்லது வரியும் வாகனங்கள் வரியும் மற்றும் வருடாந்த வரியும் விதிக்கப்படும் என்பது அறியத்தரப்படுகின்றது.

2018 ஆம் ஆண்டு உரிமக்கட்டணங்களும் வரிகளும் 2018 ஆம் ஆண்டு தை மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் மூன்று மாதங்களுக்குள் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

சு. விஜயதாஸ்,
செயலாளர்,
பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வெங்கலச்செட்டிகுளம்.

#### அட்டவணை

#### உரிமக் கட்டணங்கள்

| தொ.இல. | வியாபாரத்தின் தன்மை | உரிமக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 01 | தேநீர்க்கடை வைத்திருத்தல் | 400. 00 |
| 02 | தேநீரும் சாப்பாட்டுக்கடையும் வைத்திருத்தல் | 1000. 00 |

| தொ.இல. | வியாபாரத்தின் தன்மை | உரிமக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 3 | ஒரு சாதாரண சாப்பாட்டுக்கடை வைத்திருத்தல் | 500.00 |
| 4 | பேக்கரி வைத்திருத்தல் | 1500.00 |
| 5 | முடி வெட்டும் இடத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 6 | ஒரு சலவைக் கடை வைத்திருத்தல் | 400.00 |
| 7 | மினி சினிமா காட்டும் இடத்தை வைத்திருத்தல் | 1000.00 |
| 8 | சீமெந்து பொருட்களை விற்பனை செய்யும் நிலையத்தை வைத்திருத்தல் | 1500.00 |
| 9 | கட்டடப்பொருட்கள் விற்பனை செய்தல் அல்லது வைத்திருத்தல். | 2000.00 |
| 10 | இரும்புப் பொருட்கள் விற்பனை செய்தல் அல்லது வைத்திருத்தல் | 2000.00 |
| 11 | 25 பொதிக்கு மேல் சீமெந்து விற்பனை | 2000.00 |
| 12 | தச்சுத் தொழிற்சாலை (மனிதவளம்) வைத்திருத்தல் | 2000.00 |
| 13 | இயந்திரம் மூலம் மரம் அறுக்கும் ஆலை வைத்திருத்தல் | 2000.00 |
| 14 | பனிக்கட்டி தயாரிக்கும் இடம் வைத்திருத்தல் விற்பனை செய்தல் | 1000.00 |
| 15 | பாதணி வியாபாரம் | 1500.00 |
| 16 | ஐஸ்கிறீம் உற்பத்தி செய்தல் | 2000.00 |
| 17 | ஐஸ்கிறீம் குளிர்பானம் விற்பனை செய்தல் | 1000.00 |
| 18 | இனிப்பு ரொபி விற்பனை செய்யும் இடம் வைத்திருத்தல் | 400.00 |
| 19 | மரக்கறிக்கடை வைத்திருத்தல் | 1200.00 |
| 20 | பால் சேகரித்தல் விற்பனை செய்தல் | 3000.00 |
| 21 | மொத்த வியாபாரத்திற்காக 10 அந்தர் அல்லது அதற்கு மேல் மா, சீனி, அரிசி, உப்பு வைத்திருத்தல் | 3000.00 |
| 22 | பலசரக்கு கடை வைத்திருத்தல் | 1500.00 |
| 23 | அரிசி விற்பனை செய்தல் | 1000.00 |
| 24 | சாராயம் அல்லது பிற நாட்டு மதுபானசாலை அல்லது விற்பனை நிலையம் | 3000.00 |
| 25 | கள்ளு சேகரிக்கும் அல்லது விற்பனை செய்யும் நிலையம் வைத்திருத்தல் | 3000.00 |
| 26 | சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 500.00 |
| 27 | மோட்டார் சைக்கிள் திருத்துமிடம் வைத்திருத்தல் | 2000.00 |
| 28 | மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம் | 1500.00 |
| 29 | காய்ச்சி ஒட்டும் நிலையம் வைத்திருத்தல் | 1000.00 |
| 30 | மோட்டார் வாகன உதிரிபாகங்களை விற்பனை செய்தல் | 2500.00 |
| 31 | சைக்கிள் உதிரிபாகங்களை விற்பனை செய்தல் | 1000.00 |
| 32 | மின் பொருட்கள், விசிறிகள், மோட்டார்களை திருத்துதல் | 1000.00 |
| 33 | தொலைக்காட்சி பெட்டி வானொலி பெட்டி திருத்துமிடம் | 1200.00 |
| 34 | மின்சார பொருட்கள் விற்பனை செய்தல் | 1500.00 |
| 35 | மண்ணெண்ணெய் விற்பனை செய்தல் | 2500.00 |
| 36 | தனிப்பட்ட மேற்கத்தைய வைத்தியசாலை வைத்திருத்தல் | 1500.00 |
| 37 | மேற்கத்தைய மருந்து வகைகளை வைத்திருத்தல் விற்பனை செய்தல் | 1500.00 |
| 38 | பிளாஸ்றிக் பொருட்கள் விற்பனை செய்தல் | 1500.00 |
| 39 | பெயின்ட், வாணிஸ் பூச்சுக்களை விற்பனை செய்தல் | 1000.00 |
| 40 | நெல் அரிசி மா அரைக்கும் ஆலை வைத்திருத்தல் | 1500.00 |
| 41 | மிளகாய் கோப்பி அரைக்கும் ஆலை வைத்திருத்தல் | 1500.00 |
| 42 | புகைப்படக் கலையகம் வைத்திருத்தல் | 1500.00 |
| 43 | தொலைக்காட்சி சினிமா கசற்றுக்களை, இறுவட்டுக்கள் விற்பனை அல்லது வாடகைக்கு விடுதல் | 1500.00 |
| 44 | போட்டோ பிரதி எடுக்கும் கடை வைத்திருத்தல் | 1000.00 |
| 45 | விசேட வைபவங்களுக்கான பொருட்களை வாடகைக்கு விடும் நிலையத்தை வைத்திருத்தல் | 2500.00 |
| 46 | வியாபார நோக்கு தொலைதொடர்பு பக்ஸ் சேவை | 1000.00 |
| 47 | அரிசி ஆலை கோட்டா மில் | 3000.00 |
| 48 | கல்வி நிலையம் | 1000.00 |

| தொ.இல. | வியாபாரத்தின் தன்மை | உரிமக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 49 | வங்கி வர்த்தகம் | 3000. 00 |
| 50 | பல நோக்கு கூட்டுறவு சங்க கிளைகள் | 1500. 00 |
| 51 | பொது மண்டபம் வைத்திருத்தல் வாடகைக்கு விடுதல் | 2500. 00 |
| 52 | புடவை விற்பனை நிலையம் வைத்திருத்தல் | 1500. 00 |
| 53 | பசளை கடை, விவசாய உரங்கள் விற்பனை செய்தல் | 2000. 00 |
| 54 | நகையகம் | 2500. 00 |
| 55 | தையல் நிலையம் | 1500. 00 |
| 56 | எரிவாயு நிலையம் வைத்திருத்தல் | 1000. 00 |
| 57 | செங்கல் தயாரிக்கும் நிலையம் வைத்திருத்தல் | 1000. 00 |
| 58 | மாட்டுப்பட்டி வைத்திருத்தல் (10 ற்குள்ளே) | 100. 00 |
| 59 | பப்படம் தயாரிக்கும் நிலையம் வைத்திருத்தல் | 1000. 00 |
| 60 | தொலைத்தொடர்பு கோபுரம் வைத்திருத்தல் | 3000. 00 |
| 61 | கருங்கல் ஆலை நடாத்துதல் | 3000. 00 |
| 62 | புத்தக சாலைகள் நடாத்துதல் | 1000. 00 |
| 63 | விளம்பர பலகைகளுக்கான கட்டணம் (1 சதுர அடி) | 100. 00 |
| 64 | குழாய்க்கிணறு பராமரிப்புக் கட்டணம் (1 சதுர அடி) | 1500. 00 |
| 65 | மாட்டுத்துண்டு கட்டணம் (01 மாடு) | 25. 00 |
| 66 | வாகனத்தில் பொருட்களைக் கொண்டு சென்று விற்பனை செய்தல் | 3000. 00 |
| 67 | கோழிக்கடை வைத்திருத்தல் | 3000. 00 |
| 68 | பயிற்சிக்கூடங்கள் நடாத்துதல் | 1500. 00 |
| 69 | அங்காடி வியாபாரம் | 1500. 00 |
| 70 | 50 கோழிகளுக்கு குறையாத கோழிப்பண்ணை வைத்திருத்தல் | 2000. 00 |
| 71 | கடிகார விற்பனை, திருத்தம் செய்தல் | 1500. 00 |
| 72 | பாதணி விற்பனை நிலையம் | 1500. 00 |
| 73 | பூ மரங்கள் மரக்கன்றுகள் விற்பனை செய்தல் | 1500. 00 |
| 74 | கதிரைகள், பந்தல் சேவை | 2000. 00 |
| 75 | கண்ணாடி பொருத்தும் நிலையம் | 1500. 00 |
| 76 | அந்தியேட்டி மடக் கட்டணம் (நிகழ்வு ஒன்றிற்கு) | 1000. 00 |
| 77 | துவிச்சக்கரவண்டி இலக்கத்தகடு, படிவம் | 20. 00 |
| 78 | ஒலிபெருக்கி வாடகை | 1000. 00 |
| 79 | விளையாட்டு மைதானக் கட்டணம் (01 நாள்) | 2000. 00 |
| 80 | கவனிப்பாரற்ற மாடுகள் பிடித்தல் கட்டணம் (01 மாடு) | 1000. 00 |
| 81 | கவனிப்பாரற்ற மாடுகள் பராமரித்தல் கட்டணம் (01 நாள்) | 250. 00 |
| 82 | வியாபார பெயர் பதிவுக் கட்டணம் | 1000. 00 |
| 83 | பரிசோதனைக் கட்டணம் (1KM ற்கு) | 35. 00 |
| 84 | கருங்கற்கள் களஞ்சியப்படுத்தல், விற்பனை | 3000. 00 |
| 85 | மக்கி மண் அகழ்வு கியூப் ஒன்றிற்கு | 100. 00 |
| 86 | கருங்கல் அகழ்வு கியூப் ஒன்றிற்கு | 67. 50 |
| 87 | கிரவல் அகழ்வு கியூப் ஒன்றிற்கு | 250. 00 |
| 88 | வாகனங்களை சேவீஸ் செய்யும் நிலையங்கள் | 3000. 00 |
| 89 | பெற்றோல் நிரப்பு நிலையம் | 3000. 00 |
| 90 | கடல் மீன் வியாபாரம் 1 Kg ற்கு | 10. 00 |
| 91 | குளத்து மீன் வியாபாரம் 1 Kg ற்கு | 5. 00 |
| 92 | கட்டட விண்ணப்பம் (A & B) | 300. 00 |
| 93 | சிறு கைத்தொழில் உற்பத்தி | 1000. 00 |
| 94 | சிறிய பெட்டிக்கடை | 500. 00 |
| 95 | சிறிய பவலசரக்குக்கடை | 1000. 00 |
| 96 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை (சிறியது) | 1000. 00 |
| 97 | சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விற்பனை (பெரியது) | 2500. 00 |
| 98 | பழ வியாபாரம் | 1000. 00 |

| தொ.இல. | வியாபாரத்தின் தன்மை | உரிமக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 99 | அழகுசாதனபொருட்கள் விற்பனை | 1000.00 |
| 100 | மரத்தளபாட விற்பனை | 1500.00 |
| 101 | முட்டைக்கோழி பண்ணை சிறியளவு) | 1000.00 |
| 102 | அழகு நிலையம் நடாத்துதல் | 1500.00 |
| 103 | விசேட தேவைகளுக்காக மாடு அறுத்தல் (மாடு ஒன்றிற்கு) | 1000.00 |
| 104 | விதை தானியம், மரக்கன்றுகள் விற்பனை | 700.00 |
| 105 | விலங்கு தீவனம், மருந்து வகைகள் விற்பனை | 1000.00 |
| 106 | வடை, கடலை வண்டி | 1000.00 |
| 107 | ஒப்பந்த வேலைகள் மேற்கொள்ளுதல் | 3000.00 |
| 108 | சோதிடம் | 1000.00 |
| 109 | செபமாலைக்கடை | 1000.00 |
| 110 | விளம்பரக்காட்சிப்படுத்தல்கள் (01 நாள்) | 1000.00 |

9 - 873/1

---

**வாகன தரிப்பிடம் மற்றும் வரி அறவிடல்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 147 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 148ம் பிரிவின் கீழ் (1) ஆம் பிரிவின் கீழ் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைவாக வெங்கலச் செட்டிகுளம் பிரதேசத்தினுள் 2018 ஆம் ஆண்டு பகுதி I குறிப்பிடப்படும் தரிப்பிடங்களில் இருந்து சேவை வழங்குவதற்கும், பகுதி II குறிப்பிட்டிருக்கும் அளவான கட்டணங்களை அறவிடுவதற்கும் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச சபையின் 164 ஆம் இலக்க 13.09.2017 ஆம் திகதிய பிரேரணைகள் மூலம் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

**பகுதி I**

பேருந்து தரிப்பிடம்

1. செட்டிக்குளம் பேருந்து தரிப்பிட நிலையம்

முச்சக்கரவண்டித் தரிப்பிடங்கள்

1. வீரபுரம் முச்சக்கரவண்டி தரிப்பிடம் (VP)
2. மாங்குளம் முச்சக்கரவண்டி தரிப்பிடம் (MM)
3. செட்டிக்குளம் பிரதேசசெயலகம் முன்பாக முச்சக்கரவண்டி தரிப்பிடம் (DS)
4. செட்டிகுளம் வைத்தியசாலை முன்பாக முச்சக்கரவண்டி தரிப்பிடம் (HO)
5. செட்டிகுளம் பஸ்நிலைய முச்சக்கரவண்டி தரிப்பிடம் (BS)
6. முசலியார்குளம் முச்சக்கரவண்டி தரிப்பிடம் (MK)
7. மெனிக்பாம் முச்சக்கரவண்டி தரிப்பிடம் (MF)
8. ஆண்டியாபுளியங்குளம் முச்சக்கரவண்டி தரிப்பிடம் (AP)
9. சூடுவெந்தபுலவு முச்சக்கரவண்டி தரிப்பிடம் (SU)

## பகுதி II

**வாகனத் தரிப்பிட கட்டணங்கள்**

| | |
|---|---|
| 1. மோட்டார் சைக்கிள் (01 நாள்) | 15.00 |
| 2. முச்சக்கரவண்டி (நாள் ஒன்றிற்கு) | 10.00 |
| 3. துவிச்சக்கரவண்டி (01 நாள்) | 05.00 |
| 4. மினிபஸ் (01 நாள்) | 50.00 |
| 5. பேரூந்து (01 நாள்) | 50.00 |

9 - 873/2

---

## அக்குறணை பிரதேச சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டம்*

### திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகள்

*(261 ஆவது அத்தியாயமான) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகளின் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) வது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 09 (3) உப பிரிவின் கீழும் பின்வரும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

டி. எஸ். ராஜபக்ஸ,
செயலாளர்,
அக்குறணை சபை.

அக்குறணை பிரதேச சபை அலுவலகம்,
அலவதுகோட,
2017, ஒகஸ்ட் 23.

### தீர்மானம்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, (261 ஆவது அத்தியாயம்) 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் படி மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2013.06.28 ஆந் திகதிய 1816/42 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டதுமான திண்மக் கழிவுப்பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகள், 2016 சனவரி 14 ஆம் திகதிய 1950 ஆம் இலக்க வர்த்தமானியின் மூலம் அக்குறணை பிரதேச சபை நிருவாக எல்லைக்குள் செயற்படுத்தப்படுவது என்னால் வலுவூட்டம் செய்யப்பட்டது. மேற்குறித்த துணை விதிகளுக்கமையவும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) ஆவது உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2017ஒகத்து மாதம் 23 ஆம் திதகி சபையின் 17/278 இலக்கத் தீர்மானத்தின் கீழ் இந்தத் தீர்மானம் வத்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணைக்கு அமைய அக்குறணை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வர்த்தக நிலையங்களிலிருந்து கழிவுப்பொருட்கள் சேகரிப்பு தொடர்பான கட்டணங்களை அறவிடத் தீர்மானிக்கின்றேன்.*

**அட்டவணை**

| தொடர் இல. | வர்த்தகத்தின் தன்மை | நாளாந்தம் 1-5 கி. கிராம் வரை சேருமெனின் ஒரு மாதத்தில் அறவிட வேண்டிய கட்டணம் ரூபா | நாளாந்தம் 6-10 கி. கிராம் வரை சேருமெனின் ஒரு மாதத்தில் அறவிட வேண்டிய கட்டணம் ரூபா | நாளாந்தம் 11-19 கி. கிராம் வரை சேருமெனின் ஒரு மாதத்தில் அறவிட வேண்டிய கட்டணம் ரூபா | நாளாந்தம் 20-29 கி. கிராம் வரை சேருமெனின் ஒரு மாதத்தில் அறவிட வேண்டிய கட்டணம் ரூபா | நாளாந்தம் 30-39 கி. கிராம் வரை சேருமெனின் ஒரு மாதத்தில் அறவிட வேண்டிய கட்டணம் ரூபா | நாளாந்தம் 30-39 கி. கி வரை சேருமெனின் ஒரு மாதத்தில் அறவிட வேண்டிய கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | சிற்றுண்டிச் சாலைகள் | 250.00 | 500.00 | 1000.00 | 2000.00 | 2500.00 | 5000.00 |
| 02 | காய்கறி மற்றும் பழவகை விற்பனை நிலையங்கள் | 250.00 | 500.00 | 800.00 | 1000.00 | 1500.00 | 2000.00 |
| 03 | சுப்பர் மார்க்கட் நிலையங்கள் | 250.00 | 500.00 | 800.00 | 1000.00 | 1200.00 | 1500.00 |
| 04 | தொழிற்சாலைகள் | 250.00 | 500.00 | 800.00 | 1000.00 | 1200.00 | 1500.00 |
| 05 | தேநீர்/சில்லறைக் கடைகள்/ சாப்புகள் | 250.00 | 500.00 | 800.00 | 1000.00 | 1200.00 | 1500.00 |
| 06 | தற்காலிக/நடைபாதை வர்த்தகம் | 100.00 | 200.00 | 300.00 | 500.00 | 1000.00 | 1200.00 |
| 07 | தொலைபேசி விற்பனை நிலையங்கள் மற்றும் | 150.00 | 200.00 | 300.00 | 500.00 | 1000.00 | 1200.00 |
| | தொலைபேசி அழைப்புகள் வழங்கும் நிலையங்கள் | | | | | | |
| 08 | அலுவலகங்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் | 150.00 | 250.00 | 500.00 | 1000.00 | 1200.00 | 1500.00 |
| 09 | மருத்துவமனைகள்/மருத்துவ நிலையங்கள்/மருத்துவ ஆய்வுகூடங்கள் (அழிவடையும் பொருட்கள் தவிர) | 100.00 | 250.00 | 500.00 | 1000.00 | 1200.00 | 1500.00 |

9 - 893

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.